**புலத்கொஹுபிடிய பிரதேச சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 ஜுன் 21 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் புலத்கொஹுபிடிய பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) **கணக்கீடு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2015 முதல் 2018 வரை ஆண்டுகளிற்கான முத்திரைந கட்டண அட்டவணை தயாரிப்பதற்காக செலத்த வேண்டிய ரூபா 187,300 ஆன தொகைக்காக கடன் கொடுத்தோர் ஒதக்கீடு மெற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன் கொடுத்தோர் ஒதக்கீடு ஏற்படுத்தவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் இத்தகைய குறைபாடுகள் ஏற்படுவதை தடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | முன்னைய ஆண்டிற்காக தேசிய கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலத்த வேண்டிய கடன் தவனை ரூபா 746,897 தொகையை மீள் செலுத்த வேண்டிய வைப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகள் சரியாக தயாரிக்க வெண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | மீளாய்வாண்டில் மாகாண சபையினால் மற்றும் புர எழுச்சி கருத்திட்டத்தினால் கிடைத்திருந்த மூலதன உதவி ரூபா 163,409,224 வைப்பின் கிழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்குகள் சரியாக தயாரிக்க வெண்டும். | வேறு நிறுவனங்களில் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக கிடைக்கும் ஒதுக்கீடு எதிர்வரும் ஆண்டு முதல் மூலதன உதவின் கீழ் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iv) | ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த பிணை ரூபா | கணக்குகள் சரியாக | ஊழியர் பிணை அறவிடப்படும் |

| | | |
|---|---|---|
| 77,900 நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்க வெண்டும். | உத்தியோகத்தர்களின் மற்றும் ஊழியர்களின் பிணை வைப்பிற்காக கணக்குகள் ஆரம்பித்துள்ளதுடன் இந் நிலைமையை தீரத்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஆ) எதிர்பாராத பொறுப்பு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டின் திசெம்பர் 31 திகதியிற்கு சபையிற்கு எதிராக 02 வெளிதரப்பினர்களினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்ககள் தொடர்பான தகவல்கள் நிதிக் கூற்றுக்களினூடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்பாராத பொறுப்புகளை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். | எதிர் வரும் ஆண்டிலிருந்து எதிர்பாராத பொறுப்புகள் பற்றிய விவரங்களை கணக்கிற்கு உள்ளடக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய 07 கணக்கு விடயங்களிற்குரிய மீதிகள் மற்றும் துணைப்பதிவேடுகள்/அறிக்கை மீதிகளிற்கிடையில் ரூபா 20,971,230 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | தொடர்புடைய மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | இறுதிக் கணக்குகள் பண்டக ஆய்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டல்லாது ஒவ்வொறு விடயங்களிற்கான பதிவேடுகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. |

**1.4 இணங்காமை**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரி சட்டம். | | | |
| (i) 10 பிரிவு | மீளாய்வாண்டு இறுதியில் 10 காணி அபிவிருத்தி அனுமதிப்பத்திரங்களின் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது சாத்தியப்பாட்டறிகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். | உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள கருத்து பிழையாதல்ல. |
| (ii) 67 பிரிவு | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் 2007 முதல் 2018 வரை அங்கீகரிக்கப்பட்ட 400 கட்டிட விண்ணப்பங்களிற்காக 22 சாத்தியப்பாட்டு சான்றிதழ்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தன. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். | |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| நிதிப் பிரமாணம் 1646 | சபைக்கு சொந்தமான 10 வாகனங்களுக்குரிய ஓட்ட குறிப்புகள் மீளாய்வாண்டு இறுதி வரையும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | உங்களால் குறிப்பிடப்பட்டுள்ள கருத்து பிழையாதல்ல. |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | அசர நிருவாக சுற்றறிக்கை | | | |
| | (i) 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 இலக்க சுற்றறிக்கை | 2019 மே 07 வரையும் உத்தியோகத்தர்களின் உள் வரவு வெளிச் செல்லல்களை உறுதிப்படுத்த விரல் அடையால இயந்திரம் பயன்படுத்தப்பட வில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | விரல் அடையால இயந்திரமொன்றை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| | (ii) 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய இலக்கம் 30/2016 கொண்ட சுற்றறிக்கையின் 3.1 பந்தி | சபையின் 07 வாகனங்கள் தொடர்பாக எரி பொருள் பரிசீரனை மேற்கொண்டிருக்கவில் லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 04 வாகனங்கள் தொடர்பாக எரி எரிபொருள் பாவனை பரீட்சிக்கப்பட்டுள்ளதுட ன் மைலோ மாணி செயற்படாத 03 வாகனங்களின் எரிபொருள் பாவனையை மேற்கொள்ள முடியாதுள்ளது. |
| (ஈ) | 2018 மே 17 ஆம் திகதிய 1988/22 இலக்க உள்ளூராட்ச்சி ஆணையாளரின் சுற்றறிக்கையின் 2ஆம் பந்தி | 2009 ஆண்டின் பின்னர் வீத வரி பெறுமதி மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும | இது தொடர்பாக எழுத்து மூலம் போன்றே வாய்மொழி மூலமாகவும் பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 5,081,841 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,680,855 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 1,735,400 | 1,351,669 | 1,761,554 | 140,075 | 1.445,560 | 1,350,362 | 1,767,982 | 108,979 |
| ii | வாடகை | 1.540,950 | 1,540,950 | 1.064,297 | 523,465 | 1,757,300 | 1,442,751 | 1,442,751 | 523,465 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 298,100 | 277,768 | 277,768 | - | 362,700 | 259,532 | 259,532 | - |
| iv | ஏனைய வருமானம | 39,056,888 | 36,260,941 | 36,260,941 | 19,893,307 | 38,612,644 | 27,607,972 | 27,607,972 | 4,275,571 |

### 2.2.2 அனுமதிப்பத்திர கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்ட வேலைகள் மற்றும் வியாபாரங்கள் தொடர்பான ஆய்வின் பிரகாரம் சுற்றாடல் ஆனுமதிப்பத்திரம் பெற வேண்டிய 25 வேலைகளுக்காக அனுமதிப்பத்திரம்படாததனால ரூபா 100,000 ஆன வருமானம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | வேலைகள் மற்றும் வியாபாரங்கள் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெறாத நிறுவனங்கள் அறிவூட்டப்பட்டதுடன் சில நிறுவனங்கள் செயற்படாததுடன் சில நிறுவனங்கள் அனுமதிப்பத்திரம் பெற நடவடிக்கை எடுத்துள்ளது. |

### 2.2.3 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2018 திசெம்பர் 31 திகதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 4,515,751 மற்றும் ரூபா 15,377,556 ஆனதுட் | கீடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | இப் பணத்தை பெற்று தருமாறு சபரகமுவ மாகாண சபையிடம் எழுத்து மூலம் கோரப்பட்டுள்ளது. |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

### (அ) துணைச் சட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 09 பிரதான விடயங்களை செய்வதற்காக துணைச் சட்டம் விதிக்கபட வேண்டி போதும் 2018 திசெம்பர் 31 வரை அங்கீகரிக்கப்ட்ட துணைச்சட்டங்களை மாத்திரம் பின்பற்றி இருந்தன. | துணைச் சட்டங்களை விதிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுடலை துணைச் சட்டம் தற்போது மதிப்புக்குரிய ஆளுநருக்கு அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 04 துணைச் சட்டங்களை விதிக்க தேவையான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது. |

### (ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும், ஆண்டு இறுதியில் முன்னேற்றத்தை காட்டும் அறிக்கையொன்று தயாரித்திருக்காமை காரணத்தால் எதிர்பார்த்த இலக்குகள் அடைந்திருப்பதனை பரிசீலனை செய்ய முடியாமலிருந்தது. | முன்னேற்றத்தை காட்டப்படும் செயலாற்றுகை அறிக்கையொன்று தயாரிக்க வேண்டும். | இதுவரை வருடாந்த திட்ட முன்னேற்றத்தை குறிப்பிட செயலாற்றுகை அறிக்கையொன்று தயாரிப்பதன் தேவைபாடொன்று இல்லாதிருந்ததால் அத்தகைய அறிக்கையொன்று தயாரிக்கப்படாததுடன் 2019 ஆண்டு முதல் செயலாற்றுகை முன்னேற்ற அறிக்கையொன்றை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**(இ) கழிவுப் பொருள் முகாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருள் முகாமை நிலையத்தை சுற்றி வேலி மற்றும் கேட் ஒன்று நிர்மானித்திருக்காததுடன் பிலாஸ்டிக், பொலிதின் போன்ற உக்கலடையாத கழிவு பொருட்கள் முறையாக வெளியிடப்பட்டிருக்கவில்லை. | கழிவு பொருள் முகாமை நிலையத்தை சுற்றி வேலி மற்றும் கேட் ஒன்றை நிர்மானித்து நிலையத்தை முறையாக நடாத்த வேண்டும். | எதிர்காலத்தில் பாதுகாப்பு வேலியொனறை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மலசல கழிவுகளை வெளியிட உரிய இடமொன்று சபைக்கு இல்லாததால் மலசல கழிவுகளை வெளியிட உரிய இடமொன்று உள்ளவர்களுக்கு மாத்திரம் அச் சேவையை பெற்றுக் கொடுத்திருந்தது. | மலசல கழிவுகளை வெளியிட உரிய இடமொன்றை அமைத்துக்கொள்ள வேண்டும். | மலசல கழிவுகளை வெளியிட உரிய இடமொன்று சபைக்கு இல்லாததால் இந் நிலை ஏற்பட்டுள்ளது. |

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை மேற்கொள்வதற்கான உலகலாவிய குறிகாட்டிகளினூடாக சபை அதிகார எல்லையில் பொது மக்களின் வாழ்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேன்படுத்துவதற்கான நீண்ட கால திட்டம் தயாரிக்காத போதும், நிதி இல்லாமையினால் அவற்றை செயற்படுத்த முடியாமல் இருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். |

## 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆளணியில் 06 பதவி வகைகளில் 06 வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்வில்லை. | வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிட பதவிகள் தொடர்பாக உரிய நிறுவனங்களை அறிவூட்டிய போதும் இது வரை அவ் வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை. |

## 3.3 சொத்துக்கள் முகாமை

### 3.3.1 சொத்துக்களின் பாதுகாப்பபை உறுதிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2006 ஆண்டில் காணி ஏலவிற்பனையினால் பொது சேவைகளுக்காக சபைக்கு வழங்கப்பட்ட 02 ரூட் 10 பர்சஸ் காணியை பாதுகாத்து பயன்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்தக்களை பாதுகாத்து பயன்படுத்த நடவடிக்கை நடவடிக்கை எடுக்க வேண்டும். | சொத்துக்கள் ஆய்வொன்றின் மூலம் உறுதிப் படுத்திக் கொண்ட பின்னர் பாதுகாப்பு வேலியொனறை நிர்மானிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டின் பிரகாரம் நிலவிய 84 பொது கிணறுகள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு உரிமை நிலைத்திருக்கும் தன்மையை உறுதி படுத்த நடவடிக்கை எடுத்திருக்வில்லை. | சபைக்கு சொந்தமான சொத்தக்கள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு உரிமை நிலைத்திருக்கும் தன்மையை உறுதி படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த 84 கிணறுகளை இனங்காணுவதற்காக ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

### 3.3.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015-2017 காலப்பகுதியினுள் சபரகமுவ மாகாண சபை மற்றும் உள்ளூராட்ச்சி அமைச்சினூடாக வழங்கப்பட்டிருந்த ரூபா 42,609,063 பெறுமதியான 09 வாகனங்களின் உறுத்துரிமையை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வாகனங்களில் உரிமையை சுவிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். |

### 3.3.3 விளைவற்ற சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 3,955,318 பெறுமதியான இரண்டு வாகனங்கள் 3 வருட காலமாக விளைவற்றதாக நிலவியது. | விளைவற்ற வாகனங்களுக்காக உரிய நடவடிக்கைகள் எடக்க வேண்டும். | உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். |

### 3.3.4 வாகனங்கள் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமாக 11 வாகனங்கள் நிலவிய போதும், உள்ளவாறான சாரதிகளின் எண்ணிக்கை 04 ஆகையால் வாகனங்கள் குறை பயன்பாடொன்று ஏற்பட்டிருந்தது. | சபைக்கு சொந்தமான வாகனங்களின் பயனைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும். | உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். |

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரித்திருக்காததுடன் ரூபா 1,622,463 ஆன பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கருததை ஏற்றுக்கொள்கிறேன். |

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் கணக்காய்வு மற்றும் முகாமைத்தவ குழு நடாத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடாத்தப்பட வேண்டும். | உங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கருத்தை ஏற்றுக்கொள்கிறேன். |

.